**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.172/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : முனியசாமி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : காளிமுத்து | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

19.02.2026

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

நான் தற்போது இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.01.2025ம் தேதி காலை 09.30 மணிக்கு இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பொறுப்பில் இருந்த கடலாடி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கந்தசாமி தலைமையில் நானும், முதல்நிலைக்காவலர் திரு.கர்ணசேகரன் ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக கண்டிலான், இளஞ்செம்பூர் ஆகிய பகுதிகளில் கண்காணித்து வந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி பூக்குளம் கிராமத்திற்கு சென்றபோது செல்லையா மகன் பாலு என்பவர் தனது வீட்டின் பின்புறம் வெள்ளைநிற சாக்கு பையுடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸாராகிய எங்களை கண்டதும் அந்த சாக்குபையை மறைக்க முயன்றவரை சுற்றிவளைத்து பிடித்து அந்த பையை சோதனை செய்தபோது அதில் சுமார் 180ML அளவுள்ள Mclane Brandy என்ற டாஸ்மாக் லேபிள் உள்ள மதுவுடன் கூடிய 6 பாட்டில்களை வைத்திருந்தார்.

அதுபற்றி விசாரித்தபோது எந்த அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் மதுபானக்கடையில் வாங்கி சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அதனால் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் அவரை கைதுக்கான காரணம் கூறி 10.00 மணிக்கு கைது செய்து உறவினர்களுக்கு தெரியப்படுத்தி அவர் வைத்திருந்த மதுபாட்டில்களை 10.15 மணிக்கு அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள்

யாரும் இல்லாததால் என் முன்னிலையிலும் முதல்நிலைக்காவலர் திரு.கர்ணசேகரன் முன்னிலையிலும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், கர்ணசேகரனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரியை 14.00 மணிக்கு நிலையம் அழைத்து வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்ற எண்.03/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் மதுபாட்டில்களை தான் எதிரியிடமிருந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். **அந்த 6 மதுபாட்டில்கள் அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சிறப்பு சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் தகவல் தெரிந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் சிறப்பு சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் உள்ள அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வெள்ளை சாக்குபையை வைத்திருந்ததாக சொல்லப்படுகிற நிலையில் அதை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிரியின் வீட்டின் அருகே குடியிருப்பு வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த வீடுகளில் மக்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் கூறியபடி எதிரி மதுபாட்டில்களை வைத்திருந்தால் எதிரியின் வீட்டின் அருகே குடியிருக்கும் நபர்களை சாட்சிகளாக வைத்து மேற்படி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டிருக்கும் என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் அந்த நபர்களை சாட்சிகளாக அழைத்தார் அவர்கள் முன்வரவில்லை. இந்த விபரத்தை சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரிதான். மேலும் யாரை அழைத்து யார் முன்வரவில்லை என்ற விபரத்தை சிறப்பு சார்பு ஆய்வாளர் இறுதி அறிக்கையில் கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

எதிரியானவர் அவரது வீட்டிற்கு தேவையான பொருட்களை தான் சாக்குபையில் வைத்திருந்தார் என்றாலும், நான் கூறியபடி மதுபாட்டில்கள் இருந்திருந்தால் அவைகளை கைப்பற்றும்போது குறைந்தபட்சம் செல்போனிலாவது நாங்கள் வீடியோ பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், இவ்வழக்கை பொறுத்த வரை வீடியோ பதிவு எதுவும் இல்லாத நிலையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றாலும் சரியல்ல. சார்பு ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது என்றால் சரியல்ல. நான் கூறிய படி எதிரி மதுபானங்களை வைத்திருக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் பொய் என்றாலும், எனது உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துகொடுத்து தற்போது அரசு தரப்பு வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது வழக்கிடப்பட்டு உயர்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.172/2025
Prosecution witness.02

பெயர் : கர்ணசேகரன் தொழில் :

தந்தை/கணவர் பெயர் : சுப்பிரமணியன் கிராமம் :

வயது : தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

19.02.2026

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

நான் தற்போது இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.01.2025ம் தேதி காலை 09.30 மணிக்கு இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பொறுப்பில் இருந்த கடலாடி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கந்தசாமி தலைமையில் நானும், தலைமைக்காவலர் திரு.முனியசாமி ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக கண்டிலான், இளஞ்செம்பூர் ஆகிய பகுதிகளில் கண்காணித்து வந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி பூக்குளம் கிராமத்திற்கு சென்றபோது செல்லையா மகன் பாலு என்பவர் தனது வீட்டின் பின்புறம் வெள்ளைநிற சாக்கு பையுடன் நின்றுகொண்டிருந்தவர் போலீஸாராகிய எங்களை கண்டதும் அந்த சாக்குபையை மறைக்க முயன்றவரை சுற்றிவளைத்து பிடித்து அந்த பையை சோதனை செய்தபோது அதில் சுமார் 180ML அளவுள்ள Mclane Brandy என்ற டாஸ்மாக் லேபிள் உள்ள மதுவுடன் கூடிய 6 பாட்டில்களை வைத்திருந்தார்.

அதுபற்றி விசாரித்தபோது எந்த அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் மதுபானக்கடையில் வாங்கி சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அதனால் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் அவரை கைதுக்கான காரணம் கூறி 10.00 மணிக்கு கைது செய்து உறவினர்களுக்கு தெரியப்படுத்தி அவர் வைத்திருந்த மதுபாட்டில்களை 10.15 மணிக்கு அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள்

யாரும் இல்லாததால் என் முன்னிலையிலும், அசா.1ன் முன்னிலையிலும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், அசா.1ம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரியை 14.00 மணிக்கு நிலையம் அழைத்து வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்ற எண்.03/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்ய சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அசா.பொ.1 மதுபாட்டில்களை தான் எதிரியிடமிருந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். சிறப்பு சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கில் தகவல் தெரிந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் சிறப்பு சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் உள்ள அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வெள்ளை சாக்குபையை வைத்திருந்ததாக சொல்லப்படுகிற நிலையில் அதை கைப்பற்றவில்லை என்றால்சரிதான். அவ்வாறு கைப்பற்றாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிரியின் வீட்டின் அருகே குடியிருப்பு வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்தவீடுகளில் மக்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் கூறியபடி எதிரி மதுபாட்டில்களை வைத்திருந்தால் எதிரியின் வீட்டின் அருகே குடியிருக்கும் நபர்களை சாட்சிகளாக வைத்து மேற்படி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டிருக்கும் என்றால் சார்பு ஆய்வாளர் அந்த நபர்களை சாட்சிகளாக அழைத்தார் அவர்கள் முன்வரவில்லை. இந்த விபரத்தை சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால் சரிதான். மேலும் யாரை அழைத்து யார் முன்வரவில்லை என்ற விபரத்தை சார்பு ஆய்வாளர் இறுதி அறிக்கையில் கூறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

எதிரியானவர் அவரது வீட்டிற்கு தேவையான பொருட்களை தான் சாக்குபையில் வைத்திருந்தார் என்றாலும், நான் கூறியபடி மதுபாட்டில்கள்

இருந்திருந்தால் அவைகளை கைப்பற்றும்போது குறைந்தபட்சம் செல்போனிலாவது நாங்கள் வீடியோ பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், இவ்வழக்கை பொறுத்த வரை வீடியோ பதிவு எதுவும் இல்லாத நிலையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றாலும் சரியல்ல. சார்பு ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது என்றால் சரியல்ல. நான் கூறிய படி எதிரி மதுபானங்களை வைத்திருக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் பொய் என்றாலும், எனது உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துகொடுத்து தற்போது அரசு தரப்பு வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது வழக்கிடப்பட்டு உயர்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.